# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. | : CC 247-2024 (58/2023) |
| Deposition of witness for | | Prosecution | : LW 6 - PW 2 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : பாரிவள்ளல் | Father's Name: | ஏழுமலை |
| | | Husband Name: | |
| Village : | | Taluk | : |
| | | Calling | : |
| | | Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026

எதிரி ஆஜர்.

சாட்சியின் அடையாளம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. விஜயக்குமார் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

முதல் விசாரணை :

நான் தற்போது பாக்கம் கிராமத்தில் வசித்து ஓட்டுநராக பணிசெய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும். 30.07.201ம் தேதி காலை 07.00 மணியளவில் சோ.காட்டுக்குளம் என்ற இடத்தில் எனது மாமா ராஜமாணிக்கம் என்பவருக்கு விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக நான் அங்கு சென்றேன். நான் எனது மாமாவைப் பார்த்து அழுதுவிட்டு வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பு சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியமாக பாவிக்க கேட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 30.07.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு திருவண்ணாமலை – திண்டிவனம் சாலையில் சோ.காட்டுக்குளம் காமாட்சியம்மன் கோவில் அருகில் எங்கள் ஊரைச் சேர்ந்த ராஜமாணிக்கம் சாலை வாகன விபத்தில் அடிப்பட்டு இறந்துவிட்டதாகல் அந்த இடத்தைப்பார்க்க நானும், கருணாகரன் என்பவரும் அந்த இடத்திற்கு வந்த போது கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய உதவியாளர் மேற்படி வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும் அதற்காக எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்கசொல்லி நாங்கள் ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 247-2024 (58/2023) |
| Deposition of witness for | Prosecution : LW 1 - PW 1 |
| | Defence : |
| | Court : |
| Name : பரிமளா | Father's Name: |
| | Husband Name: ராஜமாணிக்கம் |
| Village : பாக்கம் கிராமம் | Taluk : |
| | Calling : |
| | Age : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.01.2026
எதிரி ஆஜர்.
சாட்சியின் அடையாளம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. விஜயக்குமார் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.
முதல் விசாரணை :

நான் தற்போது பாக்கம் கிராமத்தில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். எனது கணவர் பெயர் ராஜமாணிக்கம், எனக்கு 3 குழந்தைகள் உள்ளார்கள் அதில் 1 மகள், 2 மகன்கள் உள்ளார்கள். எனது கணவர் ராஜமாணிக்கம் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 02.00 மணியளவில் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் வேலைக்கு திருவண்ணாமலைக்கு சென்று பின்னர் மீண்டும் வீட்டிற்கு வரும்போது காட்டுக்குளம் அருகே வரும்போது டாடா ஏசி வாகனம் வந்து மோதி விபத்து ஏற்பட்டு விட்டது. எங்கள் உறவினர் மேற்படி எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்று போன் செய்தார்கள் நான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். மேற்படி எனது கணவருக்கு கால் உடைந்து இருந்தது, மண்டையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது

கணவரை மேல் சிகிச்சைக்காக சென்னை, ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மறுநாள் விடியற்காலை எனது கணவர் இறந்துவிட்டார். பின்னர் எனது கணவரின் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்து கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பு சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியமாக பாவிக்க கேட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 29.07.2021ம் தேதி மாலை 04.40 மணிக்கு எனது கணவர் TN 16 D 4116 என்ற Hero splendor இருசக்கர வாகனத்தை திருவண்ணாமலை – திண்டிவனம் பிரதான சாலையில் திருவண்ணாமலையில் இருந்து செஞ்சி நோக்கி சோ. காட்டுக்குளம் கிராம எல்லையில் உள்ள காமாட்சி அம்மன் கோவில் அருகே வந்தபோது அவருக்கு எதிரி திசையில் இருந்து TN 37 BE 5756 என்ற எண் கொண்ட தோஸ்த்து வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்த எனது கணவரின் மீது மோதியதாகவும் பின்னர் 108 ஆம்புலென்ஸ் மூலமாக GH ல் சேர்த்ததாக தகவல் கேள்விப்பட்டு சென்று எனது கணவரைப் பார்த்தாகவும் மேற்படி விபத்தை ஏற்படுத்தியவர் சங்கராபுரம் தாலுக்கா, புரசப்பட்டு கிராமத்தை சேர்ந்த லட்சுமணன் மகன் சுரேஷ் என்று கேள்விப்பட்டு தெரிந்துக்கொண்டதாகவும் அதுசம்மந்தமாக கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தாகவும் பின்னர் 30.07.2021ம் தேதி அதிகாலை 02.30 மணிக்கு சென்னை, ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் பின்னர் எனது கணவரின் உடலின் மீது

பஞ்சாயத்தார் முன்னிலையிலும், சாட்சிகளின் முன்னிலையிலும் பிரேதவிசாரணை செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது சம்பவத்தேதி சம்பவயிடம், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண், விபத்து ஏற்படுத்திய நபர் ஆகிவற்றைப் பற்றி எதுவும் சாட்சியம் அளிக்காமலும் பல சங்கதிகளை முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

மேற்படி எனது கணவருக்கு விபத்து எப்படி ஏற்பட்டது, எங்கு ஏற்பட்டது, யாருடைய வாகனத்தின் மூலமாக ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு மருத்துவமனையில் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் அப்போது திருவண்ணாமலையில் இருந்து மேல்சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பிவிட்டார்கள். எனது கணவரின் வாகன விபத்து நஷ்ட ஈட்டினை நாங்கள் பெற்றுவிட்டோம் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்